# தற்கால பெண் கவிஞர்களின் எழுத்துலகப் பார்வைகள்

18

முனைவர்.ப. சுதா
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
ஸ்ரீமதி தேவ் குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி

**ஆய்வுச் சுருக்கம்**

தாம் சொல்ல வேண்டியவற்றையெல்லாம் பெண்களே சொல்லாத வரையிலும் பெண்களைப் பற்றி ஆண்கள் பெற்றுள்ள தேர்ந்த அறிவு மேலோட்டமானதாகவும் முழுமையற்றதாகவும் இருக்கும்.

-ஜான் டூவார்ட் மில்

தந்தை வழிச் சமூகம் தன் மேல் சுமத்தியுள்ள அடையாளங்களை அழிக்க வேண்டுமானால் பெண் தனக்கான மொழியை உருவாக்க முயல வேண்டும். மொழி உலகிற்குள் இவள் தன்னுடைய அடக்க முடியாத ஆற்றலைப் பாய்ச்ச வேண்டும். பெண்ணின் பாலியலுக்கான சிலக் கோட்பாடுகள் இருக்குமானால் அவைகள் ஆண்களின் மொழிக்கு வெளியேதான் இருக்கும் என்கிறார் ஜூலியா கிறிஸ்தவா (Juliet Kristava) என்னும் பெண்ணியத் திறனாய்வாளர்.

பெண்களுக்கான மொழியைப் பெண்களே உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் பெண்ணியம் இந்த உலகத்தைத் தலைகீழாகப் புரட்டி புதிய அர்த்தத்தை வடிவமைக்க முடியும். பெண்ணின் அகவெளி ஆணின் அகவெளியைக் காட்டிலும் அடைக்கப்பட்ட சிறையாக இருக்கின்றது. கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்களின் போர்வைக்குள் பெண்ணின் அகமொழி கட்டுண்டு கிடக்கிறது. இதற்கு மொழி ஒரு ஊடகமாக திகழ்கிறது மொழியை பயன்படுத்தி கவிஞர்கள் தங்கள் உணர்வுகளை கவிதைகளின் வாயிலாக எடுத்துரைத்துள்ளனர்.பெண் கவிஞர்களின் எழுத்துலகமானது ஒவ்வொருவருக்குமான வாழ் வியல் சூழல்களொடும் உனர்வுகளோடும் கலந்து மொழியின் வாயிலாக வெளியோப்படுகிறது என்பதை இக் கட்டுரை அமைகிறது..

**முன்னுரை**

தாம் சொல்ல வேண்டியவற்றையெல்லாம் பெண்களே சொல்லாத வரையிலும் பெண்களைப் பற்றி ஆண்கள் பெற்றுள்ள தேர்ந்த அறிவு மேலோட்டமானதாகவும் முழுமையற்றதாகவும் இருக்கும்.

-ஜான் டூவார்ட் மில்

தந்தை வழிச் சமூகம் தன் மேல் சுமத்தியுள்ள அடையாளங்களை அழிக்க வேண்டுமானால் பெண் தனக்கான மொழியை உருவாக்க முயல வேண்டும். மொழி உலகிற்குள் இவள் தன்னுடைய அடக்க முடியாத ஆற்றலைப் பாய்ச்ச வேண்டும். பெண்ணின் பாலியலுக்கான சிலக் கோட்பாடுகள் இருக்குமானால் அவைகள் ஆண்களின் மொழிக்கு வெளியேதான் இருக்கும் என்கிறார் ஜூலியா கிறிஸ்தவா (Juliet Kristava) என்னும் பெண்ணியத் திறனாய்வாளர்.

பெண்களுக்கான மொழியைப் பெண்களே உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் பெண்ணியம் இந்த உலகத்தைத் தலைகீழாகப் புரட்டி புதிய அர்த்தத்தை வடிவமைக்க முடியும்.

மொழியைக் கைப்பற்றிக் கொள்கிறவன் ஆக்ரமிப்பாளனாக ஆளுபவளாக உருவவெடுக்கிறான் இவ்வாறு மொழியும் உடமை அடிமை என்னும் போக்கிலேயே வழி வழியாக கற்பிக்கப்படுகிறது.

"உன்னையே நீ எழுது. உன் உடம்பின் குரல்களுக்கு செவிசாய். அப்பொழுதுதான் வகுத்துரைக்க முடியாத உனது நனவிலி மனதிலுள்ள மூல வளங்கள் எல்லாம் பொங்கிப் புறப்பட்டு வெளிவரும். ஒரு பெண்ணின் உடம்பு தன்னுடைய ஆயிரக்கணக்கான உணர்ச்சி வெப்பத்தை மூல நெருப்பாகக் கொண்டு பலப்பல மொழிகளை ஒலி அதிர்வுகளாய் உருவாக்கி விடக்கூடிய தனிச் சிறப்பு மிக்க

மூலமொழியை உருவாக்கும்"(1) என்கிறார்.பெண் கவிஞர்கலள் கனிமொழி,சல்மா,மாலதி மைத்ரி சுகந்தி அன்னத்தாய் முதலிய கவிஞர்களின் எழுத்துலகம் எவ்வாறு இருக்கிறது என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கனிமொழி**

என்னை வெளிப்படுத்திக் கொள்ள இதைவிட எளிதாய் ஒரு வழி தெரியாததால் கவிதை என்கிற வடிவத்தை தேர்ந்தெடுத்தாகக் குறிப்பிடும் கனிமொழி தனது முதல் கவிதையையே இவ்வாறு தொடங்குகிறார் . வழி வழியாக பெண்ணுக்கு நிகழும் சரித்திரமற்ற வாழ்நிலையையும், சுய மொழியற்ற சூழ்நிலையையும் உணர்த்துவதாக கனிமொழியின் கவிதைகள் அமைகின்றன.

**“பந்தயங்களில் பணயமாக்கப்பட்டேன்**
**கோயில்களில்**
**விக்கிரகங்களாக்கப்பட்டேன்**
**எனக்காகப் போர் தொடுத்தார்கள்**
**கவர்ந்தவனிடமிருந்து மீட்டரர்கள்**
**உடமையாய் உரியவனாம் உயிரற்ற**
**ஜடப்பொருளாய ஆகிப்போனேன்”(2)**

பெண்ணின் இருப்பு முற்றிலுமாக சிதைக்கப்பட்டு அவளுக்கான அடையாளமற்ற வெளியில் உயிரற்ற ஜடப்பொருளாக இருப்பதை அறியமுடிகிறது பெண்ணைக் குறிக்கின்ற எந்தவொரு வார்த்தையும் இல்லாது பெண்குறித்த அதிர்வுகளை எழுப்பும் சொல்லாடலைக் கட்டமைத்திற்கும் விதம் சிறப்பானதாகும்.

"பெண் தன்னில் பலவற்றை இழந்துதான் இந்த வாழ்க்கையைச் சுமக்கிறாள் அவளின் சுயம் அழிந்து, அவளுக்கான முகமும் அழிந்த நிலையில்தான் அவள் வாழ்வு அமைந்துள்ளது”(3) ஏனெனில் ஆணின் விருப்பப்படியே இங்கு அனைத்தும் நடக்கிறது. தன்னைப் பற்றிய திறனும் அவளுக்கு அறிய வாய்ப்பில்லை எஞ்சியிருப்பது அடிமனதில கனன்று எரிகிற தழல்தான் என்பதாக அடையாளம் தொலைத்து விட்ட பெண்ணின் வாலாற்றை உணர்த்துவதாக கவிஞரின் கவிதைகள் அமைகின்றன.

**“தலையில்**
**கையில்**
**உடலெங்கும் பாரங்கள்**
**ஏற்றப்பட்டன**
**நடுங்கும் என் கைகளைப் பிடித்து**
**யாரோ அழைத்துச் சென்றார்கள்”(4)**

கணவனிடம் ஒப்படைக்க வேண்டி தன்னுடைய உடலைக் கூட சீர்செய்ய வேண்டியிருக்கிறது என்னும் வரிகள் பெண்ணெழுத்துக்கே சாத்தியப்பட்ட ஒன்றாக பெண்ணின் தனித்துவமானப் பார்வையில் தெறிப்பதாக அமைகிறது.

**“தழும்புகள் உள்ளன.**
**தீயென்றும் தெரிகிறது.**
**ஆனாலும் பூக்களைச் சொரிந்து கொண்டுதான்**
**இருக்கிறது”(5)**

தனிப்பட்ட மனிதரின் வாழ்க்கையோடு உணர்வுகளோடு, ஒட்டு மொத்த சமூகத்தின் சூழலோடு என எல்லாவற்றுக்கும் பொருத்திப் பார்க்கும் வகையில் எண்ணற்றப் புரிதலோடு கவிதையானது காட்சியளிக்கிறது.கனிமொழியின் கவிதைகளில் சுற்றுப்புறச் சூழலுக்கு பொருத்திப் பார்க்கும்

வகையில் விலங்குகள் பறவைகள் மரம், செடி, கொடிகள் போன்றவை சங்க இலக்கிய இயற்கைக் காட்சிகளை ஒத்த வகையில் பிரதிபலிக்கின்றன.கனிமொழியின் பல கவிதைகளையும் கவனித்தால் அவர் தன்னை மரபிலிருந்து விலக்கிக் கொள்ள நினைக்கிறவராகத் தெரியவில்லை. ஆனால் மரபு சார்ந்த அமைப்புகளால் ஒரு சார்பாகக் குவியும் அதிகாரத்தின் மீதான தன் விமர்சனத்தை கருவறை வாசனையின் உள்ள கடைசிக் கவிதையான.

**இந்த உலக்கையைக்**
**கட்டிக் கொண்டு மாரடிக்க**
**யாருக்கு சக்தியோ**
**நேரமோ இருக்கிறது**

இங்கு 'உலக்கை' இன்று பயணற்றுப்போன வீட்டு உபயோகப் பொருள் மட்டுமன்று. பல மரபான பண்பாட்டுச் சமிக்ஞைகளை உள்ளடக்கியது. பெண்மையின் மீது செலுத்தப்படும் அதிகாரத்தின் குறியீடு.உலக்கை இதன் மூலம் உலக்கை சார்ந்த சடங்குகளில் தனக்குள்ள சலிப்பைக் கூறுவதாகக் கவிமனம் திகழ்கிறது

**‘பூக்கள்**
**குழந்தை**
**நண்பர்கள்**
**கவிதையும் கூட**
**அவ்வப்போது**
**அலுத்துப் போகிறது**

என்னும் வரிகளை வெளிப்படுத்தும் கவிஞர் அலுத்துப் போகாத கவிவரிகளைப் படைத்திருக்கும் விதத்திற்கு எளிமையான இக்கவிதையே தக்க தொருச் சான்றாதாரமாகக் திகழ்கிறது.படிமம், குறியீடு போன்ற வலிந்து சொல்லப்படக் கூடிய முயற்சிகள் ஏதுமின்றி எளிய வார்த்தைகளால் அதிர்வுகளை ஏற்படுத்தும் விதமாகவே கனிமொழியின் பெரும்பான்மையானக் கவிதைகள் திகழ்கின்றன.

பெண் எழுத்துக்கள் பெண்ணிய எழுத்தாக இல்லாமலும் இருக்கலாம் என்னும் பாங்கிற்கு

**வானம் வசப்பட வேண்டாம்**
**எனக்குப் பழக்கமானது.**
**பூமி மட்டுமே**

கவிதையை ஆதாரமாகக் கொள்ளலாம். பழக்கமான பூமி மட்டும் போதுமென்று வாழ்வின் எதார்த்தமான ஆசைப் பிரதிபலிக்கும் வகையில் மூன்றே வரிகளில் கட்டமைத்திருக்கும் விதமே சான்றாகும்.

சமூகம் பெண்ணியம் இயற்கை போன்ற எல்லாவற்றையும் தொட்ட கனிமொழியில் கவிதைத் தனம் காதலையும் தீண்டுகிறது என்பதற்கு

என் காதலில்
பெருமைப்பட ஒன்
சுவாசிப்பதைப் பற்றிச்
சிலாகித்துச் சொல்ல
என்ன இருக்கிறது?

என்னும் வரிகள் விவரிக்க முடியாத அனுபவ வார்த்தைகளால் விரிந்து செல்லக் கூடியதாகத் திகழ்கிறது

பெண் எழுத்துக்கள் சமுதாயத்தின் உக்கிரப் பார்வையில் தவிக்கும் பெண்களின் மனநிலைகளை எடுத்துக் காட்டுகின்றன.

இதற்கு முடிவு தேடல் நிலையில் தான் உள்ளது என்று மௌனத்தின் அலறல்' என்ற கதையில் ஆண் எழுத்தாளர் புரட்சிகரமான ஒரு சிந்தனையைக் தொட்டுக் காட்டியிருப்பது போல கனிமொழியின் கவிதைகள் தேடல்நிலையில் பெண்ணின் மனநிலையை எடுத்துக்காட்டும் விதமாக திகழ்கின்றன.

**சல்மா கவிதைகளின் கட்டமைப்பு**

கவிதை எழுதுவது குறித்து அவரவர்க்கும் அவரவர்க்கான காரணங்கள் இருக்கலாம்.பூக்கள்,மீதிருக்க மனம் தேடிப் போகிறது வரைவீட்டின் தனிமையை என்று தொடங்குகிறார்.

பெண்கள் மென்மையானவர்கள் பூப்போன்றவர்கள். வலிமையில்லாதவர்கள் புத்தியில்லாதவர்கள் என்றும் அவர்கள் அடங்கிப் போக வேண்டியவர்கள் தான் என்றும் இன்னும் எத்தனை காலத்துநகுத்தான் ஆண்களால் சொல்லிக் கொண்டிருக்க முடியும! அதைக் கேட்டுக் கொண்டு இன்னும் எத்தனை காயத்துக்குதான் பெண்களால் மனதுக்குள் குமுறிக் கொண்டு வெளியில் பதுமை போல நடிக்க முடியும்?"(6) என்ற கேள்விக் கிணங்க இந்த அழுத்தத்தின் ஆகாமிப்பின் வெளிப்பாடுதான் சல்மாவின் கவிதைகளிலும் தெறிக்கின்றன.

பெண்கள் தந்தைவழிச் சமுதாயத்தில் அடக்கி ஒடுக்கி நிராகரிக்கப்பட்டு வாழும் நிலையை உணர்த்துவதாகவும், இதுவரை அனுபவித்து வந்த பெண்ணின் தளைகளுக்கு உட்பட்ட நிலையை தானும் அனுபவிக்கத்தான் வேண்டுமா என்ற வரலாற்றை மீளப்பார்வை செய்யும் கேள்வியை முன்வைப்பதாகவும்,

**"எப்போதும்**
**எல்லாக் காரியங்களும்**
**நான் இல்லாத போதே நிகழ்ந்து விடுகின்றன.**
**நான் அனுமதிக்கத் தான் வேண்டும**
**சுவாசம் நானின்றி நிகழ்வதை"(7)**

என்னும் வரிகள் கட்டமைக்கின்றன.

தனிமையில் கட்டாயமாய் தள்ளப்பட்ட ஒருப் பெண்ணின் மன உணர்வும், விடுதலைப் பெறத் துடிக்கும் மனதின் வேட்கையும்
உன் ஆதிக்க வெளியின் எல்லை என்னோடு மட்டும் முடிவதில்லை
என்னும் வரிகளும்.

**உனக்குப் புரிவதில்லை**
**உன்னைப் பற்றிச் சொல்லாமல்**
**வலியைப் பற்றி மட்டுமே பேசுமென்**
**சாத்தியமின்மை**

என்ற வரிகளும் தெளிவுப்படுத்துகின்றன.

பாதுகாப்பும், நம்பிக்கையுமற்ற வாழ்வு மனதளவில் இணக்கமும் நெருக்கமுற்ற உறவு, வாழ்வின் மீதான திருப்தியின்மை நாட்களின் நிறைவின்மை, தனிமை இப்படி அநேக இன்மைகளோடும். இருமைகளோடும் கவிதையின் பாடுபொருள்கள் பெண்ணின் அடக்கப்பட்ட மன உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைத்திருக்கின்றன.

நிமிடத்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் கவிதை வரிகளாக,

**ஒட்டு விளிம்பில்**
**தழும்பிச் சரிகிற வயிற்றோடு**
**தலை சொதிகிற ஞாங்கிற்கு**

**தன் உணவைத்**
**ஒரு சலனமுமில்லை பாதுகாப்புக் குறித்து**
**தானே தேடுவது குறித்து**
**தன் அடிவயிற்றுச் கனத்தின்**
**மேலும் யாருடைய கரு இதுவெனவும்**
**மனதில் சட்டென ஒரு அதிர்வினை**
**ஏற்படுத்துவதாக விளங்குகின்றது.**

மேலும் பகல் விலகிச் சென்ற இரவின் அகாலத்தினை. தூங்காத தளிரை வேண்டி அமர்ந்திருக்கும் இரவு, இருளில் இருப்பது. புணர்ச்சியின் துர்வாடையை ஞாபகப் படுத்தும் குருதி வாடை என சல்மாவின் கவிதைகள் பெரும்பாலும் இருட்டிலிருந்தும் தனிமையிைல் இருந்துமே துவங்குகின்றன.

பெண் தன் உடலை எழுத வேண்டும். அவளுக்கே உரிய, அவளுள் புதைந்து கிடக்கும் அடையாளங்களைச் சுயதணிக்கையின்றி எழுத்தில் வெளிக் கொணர வேண்டும். இதுவே பெண் எழுத்தின் அரசியலாக இருக்கவேண்டும்."" என்று ஹெலன் சிக்ஸஸ் என்ற பிரஞ்சு பெண்ணியத் திறனாய்வாளர் சுட்டிக் காட்டியுள்ளார். இது சல்மாவின் கவிதைகளுக்கு மிகவும் பொருந்தும்,

மொழியானது உடல், மனம் பண்பாடு ஆகிய பல நிலைகளில் ஆண் எழுத்தும், பெண்ணெழுத்தும் முற்றிலும் வேறுபட்டனவாக குறிப்பாக பெண்ணின் உடல் சார்ந்த அனுபவங்கள் அவளுக்கே உரியன் அவை அவளின் எழுத்தில் பரிணமிக்கும் போது அவ்வெழுத்து பெண்மைய எழுத்தாக விளங்கி ஆணின் பெண்ணுடல் குறித்த மதிப்பீடுகளை பொய்ம்மைகளை தகர்த்து எறிவதாக அமைகிறது இது சல்மாவின் கவிதைகளுக்கும் பொருந்துமாறு தனது கவிதைகளை நுண் உணர்வுகளாக பதிவு செய்திருக்கிறார்.

**மாலதி மைத்ரி கவிதைகளின் கட்டமைப்பு**

பெண்மொழி என்பது அரசியல் பெண்ணிருப்பை பற்றியும் பெண்ணுடலைப் பற்றியும் மொழி மற்றும் சமூக குடும்ப நிறுவனங்களில் உருவாக்கப்பட்டுள்ள அவளுக்கெதிரான கருத்தாக்கங்களை பெண்ணின் மாற்று அரசியல் என்று குறிப்பிடும் மாலதி மைத்ரி எனது கவிதைகள் சிலவற்றில் நான் நீ என்ற இருமை எதிரிடைகளின் நாடகீயம் கட்டமைக்கப் படுகிறது. இந்த நான் நீ எதிரிடைகளுக்குப் பால் அடையாளங்கள் இல்லை' என்று குறிப்பிடுகிறார்.

மேலும் ஐம்பது கவிதைகளைத் தொகுத்து சங்கராபரணி என்று எனது ஊர் வழிய ஒடிக்கொண்டிருக்கும் ஆற்றின் பெயரை இட்டுள்ளேன். ஆறு என்பது நீரின் பெயர்களில் ஒன்று நீருக்கு திட, திரவ, வாயு
நிலைகளாக மாறி மாறி நிகழும் காடகத் தன்மை சாத்தியமாகிறது. இந்த நாடகத் தன்மை கவிதைக்கும் பொருந்தும் என்கிறார்.

**“நினைத்த பொழுதெல்லாம் வரும் மழை**
**வேண்டும் பொழுதெல்லாம் கிடைக்கும் மழை**
**சோர்ந்த பொழுதெல்லாம் பெய்யும் மழை**
**மகிழ்ந்த பொழுதெல்லாம் கொட்டும் மழை**
**மனம் அறியும் மழை**
**உணரும் மனம் மழை”(8)**

'வேறு மழை' என்ற இந்தக் கவிதையில் மழையில்லையென்றால் உலகமில்லை நீரே உலகின் ஆதாரம் இதை பெண் உடல் மீதான புதுப்பார்வைக்கு ஒப்பிட்டு பார்க்கத் தோன்றுகிறது. மேலும் வரும், கிடைக்கும். பெய்யும், கொட்டும், அறியும் என்று பொழிகின்ற மழைக்கு பல்வேறு நாடகத் தன்மைகளில் சொல்லாடல்களை கட்டமைத்திருக்கும் விதம் சிறப்பானதாகும்.

அடைமழை ஓய்ந்த வேளை தெருவோர முறிந்த முருங்கைக் கிளையில் நனைந்த சிறகை சிக்கெடுக்கும் சிட்டுக்குருவி ஆற்றில் வெள்ளம் அறைக்குள் கரையுடைந்த நான்"என்று கூறும் கவிஞரின் கவிதைகளில் பெரும் பாலும் தாவரப்பச்சைகளும் சூழலுடன் கவிக்கொள்ளும் நேசமும், சூழலுக்கு ஏற்படும் துயரினை தனதாய்க் கருதி வலி உணர்தலும் என இயற்கை சார் படிமங்களை தோற்றுவிக்கும் வண்ணமாக அமைகின்றன.

'என்னுடைய உலகம் முழுக்க முழுக்க இயற்கையானது.'எனக்கும் இயற்கைக்குமான உறவை எப்படி நிலைப் படுத்துவது, முரண்பாடுகளை எப்படி சரி செய்வது என்பதை நோக்கிதான் என் கவிதை செயல்படுகிறது" என்று குறிப்பிடுகிறார் மாலதி மைத்ரி.

**ஐந்திணை**
**எதற்குள்ளும் இல்லை**
**என் வீடு**
**என்றும்**
**கள்ளுண்ட நாம்**
**கொக்குகளை விரட்டித் திரிவோம்**
**வெள்ளிக் கெண்டைகள் பாயும் மதகடியில்**
**வெள்ளி வீதி**

என்றும் சங்கப் பாடல்களை நினைவூட்டும் வகையில் கவிதைகளை கட்டமைக்கிறார்.

**கவிஞர் சுகந்தி அன்னத்தாய் கவிதைகள்**

இவர் கவிதைகளில் பெரும்பாலும் எளிய சொல்லாடல்கல்,எளிய மனிதர்களின் உறவுகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டக் கவிதைகளைக் காண முடிகிறது.நட்பு,சம கால பிரச்சினைகள் என எளிய கட்டமைக்கப்படாத சொற்களோடு கவிதைக்ள் உருவாக்கம் பெற்றுளளன.

பெண்ணியத்தில் அதிர்லினைத் தோற்றுவிக்கும் முலைகள் யோனி புணர்ச்சி போன்ற வார்த்தைப் பயன்பாடங்கள் அற்று கவிதைகள் பெண்ணுக்குரிய மரபு சார்ந்த சமூக வலிகள், இயற்கை மீதான ஏக்கங்கள். உறவுகள் சார்ந்த வெளிப்பாடுகள் உரிமைக்காகப் போராடும் தளைகள் பிணைக்கப்பட்டிருக்கும் அடிமையின் வார்த்தை யாடல்களாய் எதிரொலிக்கின்றன.

**“அம்மா நான் உச்சரித்த முதல் வார்த்தை**
**என் உணர்வோடு கலத்த உயிர் வார்த்தை**
**ஈரைந்து மாதங்கள் எனை கருவில் சுமந்தவளும் நீதான்**
**இருபத்தேழு ஆண்டுகள் எனை இதயத்தில் கமத்தவளும் நீதான்**
**பசியறிந்து பாலூட்டியவளும் ருசியறிந்து உணவு ஊட்டியவளும்**
**கண்ணுறங்கா வேளையினில் உடன் விழித்தவளும் நீதான்**
**கண்கலங்கிய நேரங்களில் கண்ணிரைத் இடைத்தவளும் நீதான்**”(9)

என்னும் வரிகள் தாயின் உன்னதத்தை உணர்த்துவதாக உள்ளது.இவர் கவிதை வரிகள் அலங்காரமற்ற சொற்கள் எதுவும் இல்லாத ஆத்மார்த்தமான உணர்வின் பிரதிபலிப்பதக அமைந்துள்ளது குறிப்பிடத்தகக்து.

"ஒரு பெண் எழுத்தாளர் தன் பேனாவில் வெள்ளை மை (தாய்ப்பாலை) அடைத்துக் கொண்டு எழுதவேண்டும்"* என்று நயமாகக் குறிப்பிடும் ஹெவனின் கூற்றிற்கு இணங்க தாய்மையைப் பற்றியக் கவிதைகளைப் புனைகிறார் நவீன கவிதையில் தாய்சேய் உறவை யாரும் பேசவில்லை. என்னுடைய கவிதைகள் இதைப்பற்றி பேசுகிற போது அது புதியதாக உள்ளது. தாய் - சேய் உறவை புனைவின் வழியாக கூறுகிறார் கவிஞர்.

“உதிர்ந்துவிழும் வேப்பம்பழங்களைப் பொறுக்கி

கொட்டைகளைப் பிதுக்கியெடுத்து

மண்ணில் புரட்டி உலரவச்சும்

பறவைகள் சுவைத்துப் போடும்

கொட்டைகளைப் பொறுக்கி எடுத்தும்

பக்குவம் பண்ணி ஓலைப்பெட்டியில் சேர்த்து வச்சு

பால்ராஜ் கடையிலேயும் பாலு அண்ணன் கடையிலேயும் எடைக்குப் போட்டுக் கிடைக்கும் காசால் உண்டியல் நிரப்பியதும்”(10)

என்னும் வரிகளில் தான் வழ்ந்த சூழலை கூறுவதாக அமைந்த் இக்கவிதை கிராமத்து வாழ்வியலை நம் கண் முன் கொண்டு நிறுத்துகிறது..இது மற்ற பெண் கவிஞர்களின் பார்வையில் இருந்து முற்றிலுமாக மாறுபடுவதை உணர முடிகிறது.

**“அன்று ஆற்றங்கரையோரம்**

**வீடு கட்டி நாகரிகம் வளர்த்த**

**மனித இனம்**

**இன்று அடுக்குமாடிக் குடியிருப்பில்**

**நகர நாகரிகம் வளர்க்குது!”(11)**

அன்று இயற்கை உணவை உட்கொண்டு இளமை குன்றாதிருந்த மனித இனம் இன்று துரித உணவை நாடிச்சென்று துயரங்களைச் சுமந்து நிற்குது என்றும்அன்று மழலையோடு கொஞ்சி மகிழ்ந்த பொன்னான தருணம் இழந்து இன்று- மணிக்கணக்கில் முகநூலில் மூழ்கி நிம்மதியின்றித் தவிக்குது என்றும் வெளி என்பது வாழிடங்களில் கிடைக்கக் கூடிய அனுபவங்களோடு உறவாடுதல் என்று கொள்ளப்படுகின்றது இதுவரையில் பெண்மீது கட்டடப்பட்டுள்ள வார்த்தைப் புனைவுகள் பெண் உடலியக்கம் அல்லது பால் இயக்கப் பணிகளில் அல்லது சடங்குகளில் ஓரங்கட்டுப்பட்டுள்ள நிலைப்பாடு எல்லாவற்றையும் ஒன்றிணைக்கக் கூடிய ஊடு சரடாக இருக்கும் என்பதையும் கனிக்னரின் கவிதை வாயிலாக அறிய முடிகிறது.

**முடிவுரை**

பெண்ணின் அகவெளி ஆணின் அகவெளியைக் காட்டிலும் அடைக்கப்பட்ட சிறையாக இருக்கின்றது. கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்களின் போர்வைக்குள் பெண்ணின் அகமொழி கட்டுண்டு கிடக்கிறது. இதற்கு மொழி ஒரு ஊடகமாக திகழ்கிறது மொழியை பயன்படுத்தி கவிஞர்கள் தங்கள் உணர்வுகளை கவிதைகளின் வாயிலாக எடுத்துரைத்துள்ளனர்.பெண் கவிஞர்களின் எழுத்துலகமானது ஒவ்வொருவருக்குமான வாழ் வியல் சூழல்களொடும் உனர்வுகளோடும் கலந்து மொழியின் வாயிலாக வெளியோப்படுகிறது என்பதை இக் கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

**அடிக் குறிப்புகள்**

1.க.பஞ்சாங்கம்,பெண்மொழி-புனைவு ப.71

2.கனிமொழிகருணாநிதி,கருவறைவாசனை,ப.17

3.சா.தேவதாஸ்,உலகபெண்படைப்பின்குரல்,அணங்கு,ப.48

4.கனிமொழி,அகத்திணை,ப.48

5.கனிமொழிகருணாநிதி,கருவறைவாசனை,ப.36

6.முனைவர்.அரங்க மல்லிகா, பெண்ணிய குரளதிர்வும் தலித் பெண்ணிய உடல்மொழியும்,ப.26

7.சல்மா,ஒருமாலையும்இன்னொருமாலையும்,ப.22

8.மாலதிமைத்ரி,சங்கராபரணிபா.33

9.கவிஞர்.சுகந்திஅன்னத்தை,அடுக்குப்பானை,45

10.கவிஞர். சுகந்தி அன்னத்தை,அடுக்குப் பானை, 16

11. கவிஞர். சுகந்தி அன்னத்தை,அடுக்குப் பானை, 32

**துணைநூற் பட்டியல்**

1.இராயகரன்.பி
ஆணாதிக்கமும் பெண்ணியமும்
கீழைக் காற்று வெளியீட்டகம்
எல்லீசு சாலை

சென்னை-2

2001 மு.ப

2.கனிமொழி கருக்கும் மருதாணி
காலச்சுவடு பதிப்பகம்
நாகர்கோயில்

2003 மு.ப

3.முனைவர்.தேவதத்தா

மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும்
உலகத்தமிழ் ஆராச்சி நிறுவனம்
சென்னை.